# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜாமக்காரன் JAMAKKARAN

VOLUME - 3 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 5

MAY 2019 TAMIL & MALAYALAM

ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=


*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*


✆ 0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com




**கர்த்தருக்குள் அன்பானவர்களே,**

உலக மக்களுக்காக **மரித்து-உயிர்தெழுந்து இப்போதும் உயிரோடிருக்கிற** நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துதல் கூறுகிறேன்.

இயேசுகிறிஸ்து ஜீவிப்பதால் விசுவாசிகள் யாவரும் கர்த்தருக்குள் ஜீவிக்கிறோம். என் ஊழியத்தில் ஒவ்வொரு வாரமும், ஒவ்வொரு மாநிலம், ஒவ்வொரு மாவட்டம், வாரம் ஒரு சபை என்று பிரசங்க ஊழியம் செய்ய போய் வருகிறேன். கடந்த ஜனவரி மாதம் முதல் நான் எங்கெங்கு ஊழியத்துக்காக சென்றேனோ, உள்நாடு-வெளிநாடு அங்கெல்லாம் கேட்ட கேள்வி, மேலும் ரயில் பயணம்,விமானப் பயணம்,பஸ் பயணம்,வீட்டிலே உறவினர்களை காணும்போது யாவரும் கேட்ட ஒரே கேள்வி, **உங்கள் ஓட்டு யாருக்கு?** சிலர் கடிதம் மூலம் எழுதும்போது எங்களுக்கு குழப்பமாக இருக்கிறது. நீங்கள் யாருக்கு ஓட்டுபோட சொல்கிறீர்களோ, அவர்களுக்கு ஓட்டு போடுவோம் ஆவலாக பதிலுக்காக காத்திருக்கிறோம் என்று எழுதுகிறார்கள். அப்படியே **வீட்டிலும்** யாருக்கு ஓட்டு? என்ற இதே பேச்சு கேட்டு சலிப்பு உண்டானது. யாருக்கும் **பதில் சொல்லாமல் சமாளித்தேன்.**

ஜாமக்காரன் **வாசகர்களுக்கு மட்டும்** யாருக்கு ஓட்டு என்று எழுதி கேட்டவர்களுக்காக சொல்கிறேன்.

இரண்டு **கொள்ளையர்கள்** என் கண்ணில் தெரிந்தார்கள். அவர்களில் **ஒரு கூட்டத்தினருக்கு** ஓட்டு போட்டேன். **கொள்ளையர்கள்** என்று தெரிந்துமா? அவர்களுக்கு ஓட்டு போட்டீர்கள்? ஆம். காரணம் வேறு Option இல்லை **-வேறு மாற்று**

எதுவும் இல்லை - அப்படியிருந்தாலும் அவர்களுக்கு ஓட்டுபோட்டு பிரயோஜனம் இல்லை. அப்படி தனி நபருக்கு அல்லது சுயேட்சைக்கு ஓட்டுபோட்டால் அவர்கள் அந்த தொகுதியில் ஜெயித்தாலும் அவர்களால் அந்த தொகுதிக்கு அல்லது நாட்டுக்கு அவர்கள் ஒன்றும் செய்ய ! அல்லது **நோட்டா** (Non Of The Above) அதாவது மேலே குறிப்பிட்ட எந்த நபருக்கும், கட்சிக்கும் ஓட்டுபோட விருப்பம் இல்லை என்று அதற்கு அர்த்தம். அப்படிப்பட்ட பட்டனை அமுக்கி நான் பதிவு செய்தாலும் ஒரு பிரயோஜனமும் இல்லை. நம் வெறுப்பை மட்டும் அரசாங்கத்துக்கு தெரிவிக்கமுடியும். அதனால் ஒரு பயனும் ஏற்படபோவதில்லை. அதனால்தான் ஒரு **கொள்ளை கூட்ட கட்சிக்கு** என் வாக்கை அளித்தேன். எப்படியோ இந்த ஜாமக்காரன் உங்கள் கையில் கிடைக்கும்போது யாராவது ஒரு கொள்ளையர்கள் தமிழ் நாட்டை சுரண்டுவதற்கு ஆட்சியில் வந்திருப்பார்கள். மத்திய அரசை ஆளப்போகிறவர்களும் மேலே குறிப்பிட்ட நிலையில் உள்ளவர்கள்தான். வழக்கம்போல் நம் தேசத்துக்காக, நம் மாநிலத்துக்காக ஜெபிப்போம் என்று கூறி முடிக்கிறேன்.

# எலக்ஷனுக்காக எப்படி ஜெபிக்க வேண்டும்?

இந்த ஆலோசனையை தாமதமாக அறிவிக்கிறேன் என்றாலும் வாசகர்கள் அறிந்துகொள்ளவே இப்போது எழுதுகிறேன். பல இடங்களில், சபைகளில், உபவாச கூட்டங்களில் ஜெபிக்கும்போது கர்த்தாவே, சிறுபான்மையினரை அழிக்க நினைக்கும் குறிப்பாக **கிறிஸ்துவ சபைகளை** ஒழிக்க நினைக்கும் **BJP,** காவி கட்சி, **திரு.மோடி** மறுபடியும் ஆட்சிக்கு வரவே கூடாது என்று மைக் வைத்து ஜெபத்தில் கதறுகிறதை கேட்கும்போது! இது எத்தனை முட்டாள்தனமான ஜெபம்,வசனத்தின்படி வாழும் கிறிஸ்தவர்கள் அப்படி ஜெபிக்கவே கூடாது!

இது நாம் **கர்த்தருக்கு ஆலோசனை** கூறுவதுபோல் அமையும். நம் தெய்வத்துக்கு பெயரே **ஆலோசனையின் கர்த்தர்** என்பதாகும்!. யார் அவருக்கு ஆலோசனை கொடுக்க கூடும்?.

நம் தேவனுக்கு நம் **நாட்டின் நிலைமை** நன்றாக தெரியும். தன் ஜனங்கள் பல இடங்களில் சுதந்திரம் அற்று **பயத்தோடு ஆராதிக்கிறார்கள்** என்பதும் அவருக்கு தெரியும்.

- **இராஜாக்களை ஆட்சியில் வைப்பதும்,** அவர்களை **ஆட்சியிலிருந்து இறக்குவதும்** அவருக்கு சாதாரண எளிதான காரியம்.

- நாட்டையோ - டையோசிஸ்களையோ ஆளும் தலைவர்களை அவர் **தெரிந்தெடுக்க**மாட்டார். ஆனால் **அனுமதிப்பார்,** கொடூரமான **ஆட்சியாளர்களையும்,** நல்ல **ஆட்சியாளர்களையும் அனுமதிப்பது** நம் கர்த்தர் தான். ரோ.13:1-5 தீத்து 3:1.

- 1பேது 2:14 மேலான அதிகாரமுள்ள இராஜாக்களானாலும் சரி **தீமை**

**செய்கிறவர்களுக்கு** ஆக்கினையும் **நன்மை செய்கிறவர்களுக்குப்** புகழ்ச்சியும் உண்டாகும்படி அவனால் அந்த இராஜாவால், பிரதமரால், முதல்வரால் அல்லது பிஷப்பால் நமக்காக கொடுக்கப்பட்ட அனுமதிக்கப்பட்ட அதிகாரிகளுக்கானாலும் சரி-கீழ்படியுங்கள். இது நம் கிறிஸ்தவ வேதத்தின் கட்டளை ஆகும். 1தீமோ 2:1-3 நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், **எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களை யும்,வேண்டுதல்களையும்,ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்.**

இதைத்தான் கிறிஸ்தவர்கள் செய்யவேண்டும். **காரணம்,**

(ஒரு ஆட்சியின்கீழ் இருக்கும்) **நாம்** எல்லாப் **பக்தியோடும்,** நல்லொழுக்கத்தோடும் **கலகமில்லாமல்** அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு ராஜாக்களுக்காகவும் **அதிகாரமுள்ளவர்களுக்காவும்** அப்படியே செய்யவேண்டும். நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக **அது** நன்மையும் **பிரியமுமாயிருக்கிறது.**

# எப்படி ஜெபிக்கக்கூடாது?

பல கிறிஸ்தவ சபைகளில் கண்ணீர்விட்டு கதறி ஒலிபெருக்கி மூலமாக அழுது ஜெபிப்பதை நானே கேட்டிருக்கிறேன், கண்டிருக்கிறேன்.

கர்த்தாவே BJP, திரு.மோடி ஜெயிக்க கூடாது!

இந்து முன்னனி தலைவர்கள் ஜெயிக்க கூடாது!

திரு. அமித்ஷா, திரு.யோகி இப்படிபட்ட **இந்து முன்னனி தலைவர்கள்** யாரும் ஜெயிக்கக்கூடாது! இப்படிப்பட்ட ஜெபத்தை நம் **ஆண்டவர் கேட்கவேமாட்டர்.** இது **கிறிஸ்தவர்கள்** வழியல்ல - **கிறிஸ்துவின்** வழியுமல்ல.

BJP தலைவர்களையும், **காவி கட்சி** தலைவர்களையும், RSS தலைவர்களையும் திரு. மோடி அவர்களையும், திரு.யோகி அவர்களையும் **ஆசீர்வதியும்** அவர்களுக்கு **உம்மை வெளிப்படுத்தும்** அவர்கள் யாவரும் **இயேசுவை** அறியவேண்டும் என்று தான் நாம் ஜெபிக்கவேண்டும். காரணம், இயேசு **அவர்களையும் நேசிக்கிறார்.** அதுமட்டுமல்ல, **அவர்களுக்காகவும் இரத்தம் சிந்தியிருக்கிறார்** என்பதை மறக்ககூடாது.

☐ தமிழ்நாட்டில்உள்ள **ஆளும் கட்சி-எதிர்கட்சி** தலைவர்கள், மந்திரிகள் நூற்றுக்கு 99 பேர் **ஊழல்வாதிகள்தான்.** தமிழ்நாட்டில் **தர்மபுரியில்** கல்லூரி மாணவிகள் பஸ்ஸிலிருந்து வெளியேற்றாமல் **பெட்ரோல் ஊற்றி கொளுத்தி** துடிக்க துடிக்க **கொன்றவர்களின்** கட்சிதான் இப்போது தமிழ்நாட்டை ஆண்டு கொண்டிருக்கிறது.

☐ மதுரையில் தினகரன் பத்திரிகை **கருத்து கணிப்பு** எழுதியதால் அந்த கட்சி அலுவலகத்தையே **தொழிலாளர்களோடு** சேர்த்து பெட்ரோல் குண்டு வீசி அத்தனை பேர்களையும் **தீ வைத்து கொன்றதில்** சம்மந்தப்பட்டவர்கள்தான் இப்போதைய **எதிர்கட்சியில்** உள்ளவர்கள், பாதிக்கப்பட்டவர்களின் பத்திரிக்கை அலுவலகத்தில் உள்ளவர்கள் **உரிமையாளர்கள் யாவரும் எதிர்கட்சியினரின் உறவினர்கள்தான்.**

சமீபத்தில் தான் அவர்களுக்கு எதிராக நீதிதுறை தீர்ப்பு வந்தது.

ஆனால் இப்போது **பதவி,ஆட்சி** என்று வந்தவுடன் உறவினர்கள் ஒன்றாக இணைந்து கொண்டு போட்டோவுக்கு போஸ் கொடுக்கிறார்கள். மேலும் இவர்கள் யாவரும் ஒருவருக்காக ஒருவர் தேர்தலில் வாக்கு சேகரிக்கிறார்கள். **இதுதான் அரசியல்** இதில் எந்த கட்சி **யோக்கியமானவர்கள் ?**

**எதிர் கட்சியின்** மூத்த தலைவரின் குடோனில் ஆள் உயரத்துக்கு **கோடி கோடியாக** ரூபாய் நோட்டுகளை தேர்தல் ஆணையத்தினர் பிடித்தார்களே!.

இவர்களில் **யார் யோக்கியர்கள்?**

இந்த இரண்டு கட்சியினரில் யாருக்கு **ஓட்டு போடுவீர்கள்?**

இவர்கள் யார் ஜெயித்தாலும் தேர்தல் ஆணையத்தினரால் **பிடிப்பட்ட கோடிகளையும்,** தேர்தலில் **ஓட்டுக்கு** இவ்வளவு என்று **ஜனங்களுக்கு** பகிரங்கமாக கோடிகளை அள்ளி வீசினார்களே! **அந்த பணத்தையும் திரும்ப எடுக்கவேண்டாமா?** அதற்கு **பதவி** வேண்டும், **ஆட்சியும்** வேண்டும்!

இப்படி நம்நாட்டு அரசியல் **காமராஜர்** ஆட்சிக்குபின், **வாஜ்பாய்** ஆட்சிக்குபின், **மொரார்ஜி, லால்பகதூர் சாஸ்திரி** ஆகியவர்களின் ஆட்சிக்குபின் வந்தவர்கள் யாவரும் **ஊழல்களில்** திளைத்து ஊறிபோய்விட்டார்கள். இனி **எந்த கட்சி ஆட்சிக்கு** வந்தாலும் பண ஊழலை சரிபடுத்தவே முடியாது?

கடினமாக, நியாயமாக, உண்மையாக ஆட்சி நடத்தி **லஞ்சத்தை ஒழிக்க** முயலும் **தலைவர்களை** அல்லது அரசாங்க அதிகாரிகளை அந்த கட்சியின் ஆட்களே **கொலை செய்து** அழித்துவிடுகிறார்கள். மணல் கொள்ளையை லாரிகளோடு பிடித்த எத்தனை தாசில்தார்கள் கொல்லப்பட்டார்கள் என்பதை நாம் யாவரும் அறிவோமே!.

☐ அவ்வளவு ஏன்? நம் **CSI கிறிஸ்தவ சபையில்** ஆந்திரா CSI டையோசிஸ்ஸில் ஒரு கான்ட்ரக்ட் வேலையை தன் ஆட்களுக்கு கொடுக்கவில்லை என்பதற்காக டையோசிஸ்ஸில் உள்ள முக்கியமானவர்கள் ஒரு நல்ல **பிஷப்** அவர்களை காரில் பயணம் செய்தபோது குடும்பத்தோடு **பெட்ரோல் ஊற்றி** தீ வைத்து கொன்றார்களே!. கொன்றவர்கள் யாவரும் சபையில் **பெரிய மனிதர்கள்**, காணிக்கை நிறைய கொடுப்பவர்கள்தான். **டையோசிஸ்** பணத்தில் ஊழல்செய்ய அந்த குறிப்பிட்ட **பிஷப் தடையாக** இருக்கிறார் என்பதால் அந்த **நல்ல பிஷப்பையே** துடிக்கதுடிக்க கொன்றார்களே, கொல்லப்பட காரணமான அந்த சபை பெரிய மனிதர்கள்தான் அவர்களின் சொந்த செலவில் அந்த **பிஷப் அடக்கம் செய்யப்பட்ட கல்லறையை** கட்டிக்கொடுத்தார்.

☐ **திருநெல்வேலி, தூத்துக்குடி** CSI டையோசிஸ்ஸில் **கணக்கு விவரம்** அறிந்த டையோசிஸ் அலுவலர் ஒருவர் இருந்தார். அந்த டையோசிஸ் பொறுப்பில் உள்ள பெரியவர்கள் கொள்ளையடித்த டையோசிஸ் பணத்தின் விவரத்தை அவர் ஆதாரத்தோடு அறிந்ததால் அந்த **அலுவலக ஊழியரை தீ வைத்து** கொளுத்தி அவர் **தற்கொலை** செய்துகொண்டார் என்று அறிவித்து **அந்த வழக்கை** மூடி அடக்க ஆராதனை

நடத்தினார்களே!

☐ கிறிஸ்தவர்களில் தாங்கள் தான் உண்மையான **ஆவிக்குறிய சபை** என்று பெருமை கொள்ளும் **சிலோன் பெந்தேகோஸ்தே** TPM சபை பாஸ்டர் (கேரளத்தில்) ஊழியத்துக்காக தங்களை ஒப்படைத்த சபையில் உள்ள ஊழியம் செய்யும் வாலிப பெண் சகோதரிகள்(Sisters) இரண்டு பேர் குறிப்பிட்ட அதே சபையின் மூப்பர்களில் ஒருவரின் வீட்டிற்கு அடிக்கடி சென்று அவரோடு **தொடர்ந்து பாவம்** செய்ததை **பாஸ்டர்** கண்டுபிடித்து-அவர்களைப்பற்றி சென்னையில் உள்ள **தலைமை சபை** பாஸ்டர்களுக்கு அறிவிக்க முயற்சித்தபோது ஒரே இராத்திரி **பாஸ்டரின் கழுத்தை** நெரித்து கொன்று பாஸ்டர் **இருதய வியாதியல்** மரித்தார் என்று கூறி அடக்க ஆராதனை நடத்தினார்கள். போலீஸ் பிடித்தது. பிணத்தை தோண்டி எடுத்தது. TPM தலைமை அலுவலகத்திலிருந்து **கோடிகள்** செலவழித்து பாஸ்டரை **போஸ்ட்மாட்டம்** செய்த **டாக்டர்**, போலீஸ் **உயர்அதிகாரிகளை** சரிபடுத்தி அந்த வழக்கை ஒன்றுமில்லாமல் செய்தார்களே! அந்த **கோடிகள்** யாருடையது?. அதுபோலவே **தூத்துகுடி** பாஸ்டர் கொலை வழக்கு கோர்ட்டுக்கு போகாமல் முடிக்க செலவழித்த **கோடிக்கணக்கான** ரூபாய்கள் TPM சபை தலைமையில் உள்ளவர்கள் எதிலிருந்து எடுத்து கொடுத்தார்கள்?. **தசமபாகம்** என்ற பெயரில் சபை மக்களிடம் கட்டாயப்படுத்தி **வாங்கி குவித்த** அந்த விசுவாசிகளின் **காணிக்கை** பணத்தால் அல்லவா **சபை பெயர்** நாறாமல் இருக்க அரசாங்க **அதிகாரிகளின்** வாயை அடைத்தார்கள். இவர்கள் யாவரும் **ஆவியில் நிறைந்து அந்நியபாஷை** பேசுபவர்கள். இந்த கள்ளபாஷையை பரலோக பாஷை என்று நம்பும் அந்த சபை மக்களை குறித்து பரிதாபப்படுகிறேன். **நாட்டிலுள்ள அரசியலிலும்,** கிறிஸ்தவ சபைகளில் (CSI,லூத்தரன்-TPM,IPC அனைத்து சபைகளில்உள்ள **சபை அரசியலில்** நிகழும் பிரச்சனைகள், **ஊழல்கள் பாவங்கள்** யாவும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது. இவைகளை நினைக்கும்போது மனம் மிகவும் வேதனைப்படுகிறது. உலக மக்களைப்போலவும், அரசியல்வாதிகள்போலவும் அனைத்து கிறிஸ்தவ சபைத்தலைவர்களும், பாஸ்டர்களும், சபை விசுவாசிகளும் வாழ்கிறார்களே! என்பதை நினைக்கும்போது யாவருக்காகவும் சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்து எத்தனையாய் வேதனைப்படுவார்.

☐ சபைத்தலைவர், நிர்வாகிகள், பாஸ்டர்கள், பிஷப்மார்கள் பெரும்பாலானவர் களிடத்தில் உண்மையில்லை. சபையில்,டையோசிஸ்ஸில் **களவாடிய** பணத்தை அல்லது **ஊழலை மூடி மறைக்க** இவர்கள் செய்த **கொலைகள்,அநியாயங்கள்** ஏராளம் ஏராளம். **தென்** இந்திய சபைகள், **வட** இந்திய சபைகள் அனைத்து சபைகளுக்கும் போய் ஊழியம் செய்தவன். நான் ஜாமக்காரனில் எழுதிய அத்தனைக்கும் பத்திரிகை ஆதாரம் உண்டு. சபைகளின் **வழக்கு நகல்**, உண்மையை மாற்றி எழுதிய FIR, **பொய்யாய்** எழுதிய டாக்டருடைய **போஸ்ட் மாட்டம்** ரிப்போர்ட் அத்தனையும் என்னிடம் உண்டு. இவைகள் யாவும் நானே கஷ்டப்பட்டு புலனாய்வு செய்து கண்டுபிடித்த ஆதாரங்கள் அல்ல!, அது என் வேலையும் அல்ல!. அத்தனை ஆதாரங்களையும் அனுப்பியவர்கள் அந்தந்த சபையை குறித்த பாரம் உள்ளவர்கள், நலம் விரும்பிகள், அப்படிப்பட்டவர்கள் மனவேதனையுடன் விவரங்களை எனக்கு அனுப்பிவைத்துள்ளனர். நான் அவைகளை ஜாமக்காரனில் எழுதி பகிரங்க படுத்துவேன் என்பதற்காக அல்ல. அவைகளுக்காக ஜெபிப்பேன் என்று நம்பி இவர்கள்

விவரங்களை எனக்கு அனுப்புகிறார்கள்.

**நாட்டிலும், கிறிஸ்தவ சபைகளிலும் ஊழல்களை அறியும்போது என்னால் சகிக்கமுடியவில்லை!** - ஜாமக்காரன் ஊழியத்தை எப்போது கையில் எடுத்தேனோ அன்றிலிருந்து எந்த ஊழியரையும் பெரும்பாலான பிஷப்மார்களையும், எந்த பாஸ்டாரையும், எந்த **அரசியல் தலைவர்களையும்,** எந்த **கட்சியையும்** நம்ப முடியாததால் யாவருக்கும் என்னால் **மரியாதை** செய்ய முடியவில்லை. யாரையும் மனதில் **மதிக்க** முடியவில்லை!. இவைகளையெல்லாம் நினைக்கும்போது மிகபெரிய **வெறுப்பும்,** வேதனையும் கூடுகிறது. ஆகவே இப்போதெல்லாம் **யார் என்னை பிரசாங்கத்துக்கு** அழைக்கிறார்களோ! அங்கு **வேத வசனத்தை** வாசிப்பதைப்பற்றி மட்டும் கூறி, **வசனத்தின்படி விசுவாசிகள் எப்படி வாழவேண்டும் என்பதைக்**குறித்தும், **மனம்திரும்புதல், சாட்சியுடன் வாழ்வது எப்படி?** என்பதைப்பற்றியும் கூறி ஜெபித்து கன்வென்ஷன்களை முடிக்கிறேன். மேலும் தங்கள் ஆத்துமாக்களை காத்துக்கொள்ள அவர்கள் என்னிடம் **வேத வசன** விளக்கங்களை கேட்க ஆவலாக இருந்தால் அதற்கான பதில் அளித்தும்,அவர்களின் மற்ற ஆவிக்குறிய கேள்விக்களுக்கெல்லாம் வசன ஆதாரத்தோடு **பதில் அளித்தும் கூட்டத்தை** முடித்து விடுகிறேன். அவர்கள் தங்கள் **சபையில்உள்ள அநியாயங்கள்**, ஊழல்களைக்குறித்தும் அங்குள்ள டையோசிஸ் அரசியல் விவகாரங்கள் எதைப்பற்றியும் நான் அவர்களிடம் விசாரிப்பதில்லை. அவர்கள் டையோசிஸ் விவகாரங்களிலும் தலையிடுவதுமில்லை. அவரவர் ஆத்துமாக்களை எப்படி காத்துக்கொள்ளவேண்டும் என்பதைக்குறித்து மட்டும் கூறி வந்து விடுகிறேன். **ஜாமக்காரனில்** மட்டும் வாசகர்களுக்காக டையோசிஸ் அல்லது சபை பிரச்சனைகளை ஜெபத்துக்காகவும் அதுவும் அவர்களாக விரும்பி எனக்கு எழுதி கேட்பதால் அதற்காக பதில் எழுதும் முறையில் ஜாமக்காரனில் வெளியிடுகிறேன்.

## கர்த்தருக்கு ஸ்தோத்திரம்:

நம் ஜாமக்காரன் வாசகர் குடும்பத்திலுள்ள பிள்ளைகள் அனைவரும் (ஒருவரைத்தவிர) 10,12வது பரீட்சைகளில் வெற்றிபெற்ற செய்தியை அறிந்து தேவனை துதிக்கிறேன். வெற்றி பெற்றவர்கள் இனி அடுத்த படிப்புக்கு முன்னேற எடுக்கும் முயற்சிகளை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக. எந்த **குரூப்** எடுக்கவேண்டும் என்பதைக்குறித்து கர்த்தர் வெளிப்படுத்துவாராக. மேலும் அதற்கான பணதேவைகளையும் கர்த்தர் சந்திக்க கர்த்தரே வழி உண்டாக்குவாராக. இதற்கென்று நான் விசேஷ ஜெபம் ஏறெடுக்கிறேன். தோல்வியடைந்த பிள்ளைகள் சோர்ந்துபோகாதபடி மறுபடியும் ஜெபத்தோடு முயன்று வெற்றிபெற முன்னேறுங்கள். உங்கள் பின்னால் நான் ஜெபத்தில் தாங்குவேன். நீங்கள் ஜெயிப்பீர்கள். கர்த்தர் நல்லவர்.


**இந்திய** தேசத்தையும், நம் **தமிழ்நாட்டையும்,** நம் **சபைகளையும், திருமண்டலத்தையும்** கர்த்தர் ஆசீர்வதித்து காப்பாராக! **கர்த்தர்** இந்த மாதம் முழுவதும் உங்களை கண்மணிபோல் காத்து வழி நடத்துவாராக. **ஆமென்.**

**கர்த்தரின் பணியில்**

**✍ டாக்டர்.புஷ்பராஜ்**

# கேள்வி – பதில்

## ஜாமக்காரனின் பதில்கள்



**கேள்வி: நம்முடைய மரணத்துக்கு பிறகு நம் உடலை மருத்துவ கல்லூரி மாணவர்களின் ஆராய்ச்சிக்கு கிறிஸ்தவர்கள் தானம் செய்யலாமா?**

**பதில்:** தாராளமாக **தானம் செய்யலாம்.** ஆனால் நம் குடும்பத்தினர் ஒத்துக் கொள்ளமாட்டார்கள். இலங்கையில் விடுதலை புலிகளின் தளபதி ஒருவர் குண்டு அடிப்பட்டு மரிக்கும் தருவாயில், மெடிக்கல் காலேஜ் மாணவர்களின் ஆராய்ச்சிக்காக **தன் உடலை** ஒப்படைக்க கேட்டுக்கொண்டார். அதன்படியே அவர் உடல் ஒப்படைக்கப்பட்டது. அந்த நாளில் நான் யாழ்பாணத்தில்தான் இருந்தேன். என் முதல் கூட்டமும் அதே நாளில்தான் St. John's கல்லூரி ஆடிட்டோரியத்தில் தொடங்கப்பட்டது.

நம் குடும்பத்தினர், உறவினர்களுக்கு விருப்பம் இருக்காது. ஆனால் உடலை ஒப்படைப்பதற்கு பதில் உடலின் **முக்கிய உறுப்புகளை கண்-கிட்னி** போன்ற **மற்ற உறுப்புகளையும்** தாராளமாக **தானம்** செய்யலாம்.

அதனால் **பார்வையற்ற** பலருக்கு பார்வை கிடைக்குமே, **கிட்னி** பாதிக்கப்பட்ட பலர் உயிரோடு வாழ பயன்படுமே! மரித்த பின்னும் நம் உடல் உறுப்புகள் **மற்றவர்களை வாழவைக்குமானால்** தாராளமாக அவைகளை **தானமாக** கொடுக்கலாம். மரிக்கும்முன் அதற்கென்று அரசாங்க ஆஸ்பத்திரிகளில் ஒரு விண்ணப்ப பாரம் உண்டு. அதை வாங்கி பூர்த்தி செய்து, உயில் எழுதுவதைப்போல எழுதி **வீட்டாரின் ஒப்புதல் கையெழுத்தும்** பெற்று அந்த பாரத்தை அரசாங்கத்திடம் சேர்ப்பித்தால் மரித்தவுடன் குடும்பத்தினர் தொலைபேசியில் ஆஸ்பத்திரிக்கும் மரண விவரம் அறிவித்தால் ஆஸ்பத்திரி டாக்டர்கள் தாமதபடுத்தாமல் ஒரு ஆம்புலன்சில் டாக்டர்கள் குழுவினர் சகல உபகரணங்களுடன் மரண வீட்டுக்கு வந்து மரித்த உடலை ஆம்புலன்ஸ்ஸிலேயே உள்ள ஆப்ரேஷன் தியேட்டர்போல உள்ள டேபிளில் கிடத்தி உடல் **பாகங்களை** எடுத்து ரசாயனத்தில் இட்டு பாதுகாத்து, உடல்உறுப்புகள் எடுத்த அடையாளம்கூட தெரியாமல் தைத்து மீண்டும் குடும்பத்தினரிடம் ஒப்படைப்பார்கள்.

## வாசகர்கள் அறிந்துக்கொள்ள வேண்டியது:

ஒருவன் மரித்துவிட்டால் அவன் சரீரம் **பூமிக்குள்** வைத்து விடுகிறார்கள்(பிர 12:7) மண்ணிலிருந்து எடுக்கப்பட்டாய் மண்ணுக்கே திரும்புவாய் என்ற வார்த்தையை ஊழியர் கூறி **அடக்க ஆராதனை** நடத்துவார். அதன்பின் நம் சரீரம் மண்ணோடு மண்ணாக கரைந்துவிடும். நியாய தீர்ப்பு நாளில் துன்மார்க்கனாலும்-சன்மார்க்கனாலும் கர்த்தருக்கு

முன் நிற்கவேண்டும். அதற்காக கர்த்தர் நமக்கு ஒரு **மகிமையின்** சரீரத்தை தருவார். எப்படி மரித்தீர்களோ! அதே **வயதில்** அதே **ரூபத்தில்** கர்த்தருக்குமுன் நிற்பீர்கள். உங்கள் கண்ணால் அதை காணலாம்(யோபுவும் அப்படியே கூறுகிறார்) கண்களை தானம் செய்திருந்தால் நமக்கு கொடுக்கப்படும் மகிமையின் சரீரத்திற்கான அந்த **கண்கள்** வழியாக நாம் கர்த்தரை காணலாம். **நியாய தீர்ப்புக்குமுன்** நிற்கும்போது நீங்கள் மரிக்கும்போது தானமாக கொடுத்த கிட்னி அங்கு தேவைப்படாதே! மற்ற உறுப்புகளும் தேவைப்படாது, மகிமையின் சரீர உறுப்புகள் போதுமே!. **இரத்த சாட்சியாய்** மரித்தவர்கள், தீயில் கருகிபோனவர்கள், விமான பயணத்தில் வானத்திலேயே வெடித்து சிதறிப்போனவர்கள், கடலில் ஆழத்தில் விழுந்து செத்தவர்கள் யாவருக்கும் இந்த பதில் பொருந்தும். ❖❖❖❖❖❖❖

**கேள்வி: உங்கள் ஒவ்வொரு பிரசங்கத்திலும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் வசனத்தின்படி வாழ வேண்டும், எதை செய்தாலும் வசனத்தின்படி தான் செய்ய வேண்டும் என்று பிரசங்கிக்கிறதை நான் அறிவேன். அப்படியானால் டாக்டர்.புஷ்பராஜ் ஆகிய நீங்கள் உங்கள் சொந்த வாழ்க்கையாலும், வீட்டிலும் நூற்றுக் நூறு கர்த்தரின் வசனத்தின்படிதான் செய்கிறீர்களா? என்பதை உங்கள் மனதை தொட்டு சொல்லுங்கள்?**

**பதில்:** இந்த கேள்விக்கு **மனதை தொட்டும்**, சில ஊழியர்கள் கூறுவதைபோல் **மனம் திறந்தும்** நான் பேசபோவதில்லை. ஒரு விசுவாசி எதை பேசினாலும் **உள்ளதை** உள்ளதென்றும் **இல்லாததை** இல்லை என்றும் கூறுங்கள் என்று இயேசு கூறியதைபோல் உண்மையை நான் பேசுகிறேன்-எழுதுகிறேன். அந்த வகையில் நான் இரட்சிக்கப்பட்ட 1964ம் ஆண்டு முதல் இதை எழுதும் நாள் வரை ஒவ்வொரு காரியத்திலும் ஒவ்வொரு செயலிலும் நூற்றுக்கு நூறு வசனத்தின்படி வாழ **முயற்சி செய்கிறேன்** என்றுதான் பதில் அளிக்க முடியும்.

நூற்றுக்கு நூறு **கிறிஸ்துவைபோல்** வாழ்ந்தவன் இல்லை. நூற்றுக்கு நூறு வசனத்தின் படி வாழ்ந்தவனும் இல்லை. ஆனால் நூற்றுக்கு 99 சதவீதம் **வசனத்தின்படி வாழ** என்னால் முடிந்த வரை **முயன்றுக்கொண்டிருக்கிறேன்**. என்னுடைய ஆவிக்குறிய **வளர்ச்சி** அல்லது **முதிர்ச்சி** என் தனிபட்ட **ஜெப வாழ்க்கை,** என் **மனைவிக்கோ,** என் **குடும்பத்தினருக்கோ,** இருக்கவேண்டும் என்று நான் எதிர் பார்க்கலாம்-ஆனால் அவர்களை கட்டாயப்படுத்தவோ அல்லது நிர்பந்திக்கவோ முடியாதே! அப்படிபட்ட சூழ்நிலையில் வசனத்தின்படி வாழ்வதில் **எனக்கு சருக்குதல்** ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் என் மனசாட்சி பொருத்தவரை கர்த்தருக்குமுன் குற்ற உணர்ச்சி உண்டாகாமல் **என் தனிபட்ட வாழ்க்கையை மட்டும் பாதுகாத்துக்கொள்கிறேன்.**

சில சமயம் நான் கூறுவது, பேசுவது குடும்பத்துக்கு பிரச்சனை உண்டாக்கும் என்று நான் உணர்ந்தால் அப்போது **பொய் பேசினால் தான்** பிரச்சனை அதிகமாகாது தடுக்க முடியும், அல்லது மற்றவர்களுக்கு அது ஆபத்தை உண்டாகாமல் தடுக்க முடியும் அல்லது குடும்பம் உடையாமல் தடுக்கமுடியும் என்ற நிலை உண்டாகுமானால் **அந்த சூழ்நிலையில் உண்மையை மறைக்க முயலுவேன்** அல்லது அந்த சூழ்நிலையில் பொய் பேசமால்

சமாளிக்க முயலுவேன் அல்லது **அந்த இடத்தைவிட்டு போய்விட முயலுவேன்.** பொய் பேசி ஆண்டவர் மனதை வேதனையடைய செய்யமாட்டேன். ஆனால் அதேசமயம் தவிர்க்க முடியாத சூழ்நிலையில்நான் **சமாளித்த அல்லது மறைத்த** விஷயத்தைப்பற்றி தனியாக அமர்ந்து ஆண்டவரிடம் மன்னிப்பு கேட்டு மறுபடியும் பொய் பேசும் சூழ்நிலை உண்டாகாதபடி மிகவும் ஜாக்கிறதையாக இருப்பேன்.

அநேக ஆண்டுகளுக்குமுன் ரயில் ரிசர்வேஷன் டிக்கட்டை என் அவசர பயணத்துக்காக கள்ள மார்க்கெட்டில் வாங்கி டிக்கட் பரிசோதகர் அந்த டிக்கட்டில் என் பெயருக்கு பதில் வேறு நபரின் பெயர் இருப்பதை கண்டு அறிந்தும் அறியாதவர்போல் கடந்து போய்விட்டார். அவர் நான்தான் டாக்டர்.புஷ்பராஜ் என்பதை அறிவார். அந்த **ஸ்லிப்பரில்** உள்ளவர்களில் இரண்டு பேர் என்னை நன்கு அறிந்தவர்கள் டிக்கட் பரிசோதகர் சார்டில் உள்ள பெயரை சத்தமாக அழைத்த உடன் அது என் பெயர் அல்ல என்பதை அந்த இரண்டு நபர்களும் அறிந்திருப்பார்கள். அன்று பிரச்சனை ஏதும் உண்டாகவில்லை. டிக்கட் பரிசோதகர் என் ID அடையாள அட்டையும் கேட்காமல்போனதால் அவர் என் தவறை அறிந்து கொண்டு டாக்டர் என்ற மரியதை நிமித்தம் பேசாமல் போய்விட்டார். அந்த இரவு நான் பட்ட பாடு, என்னை அறிந்த அந்த ஸ்லிப்பரில் இருந்த இருவருக்கு முன்பாகவும், டிக்கட் பரிசோதகர் முன்பாகவும் நான் கூனி குருகி போய்விட்டேன். ஸ்லிப்பரில் இருந்தவாறு இயேசு கிறிஸ்துவிடம் பலமுறை மன்னிப்பு கேட்டுகொண்டே இருந்தேன். வாயிலும் மன்னிப்பு மன்னிப்பு என்று முணுமுணுத்தவாறு பைத்தியகாரன்போல இருந்தேன். அந்த சம்பவத்துக்கு பின் ரிசர்வேஷன் செய்யாமல் பயணம் செய்வதில்லை. சில சமயம் கட்டாயம் அன்றே புறப்பட்டாக வேண்டும் என்ற நிலை வந்தால் சாதாரண வகுப்பு டிக்கட் வாங்கி ஸ்லிப்பர் கோச்சில் ஏறி டிக்கட் பரிசோதகரை நானே தேடி சென்று என் அவசர நிலையை அவருக்கு அறிவித்து முறைப்படி ஸ்லிப்பருக்குள்ள பணமும்-அபராத தொகையும் அடைத்து பயணித்திருக்கிறேன். கூடியவரை மறுபடியும் அந்த சூழ்நிலை வராமல் பார்த்துக்கொள்கிறேன். என் ஊழியம் பல மாதங்களுக்கு முன்பே திட்டமிட்ட ஊழியம் ஆனபடியால் 3 மாதத்துக்கான ரிசர்வேஷன் டிக்கட்களை வாங்கி வைத்துவிடுவேன்.

**இயேசுவைபோல வாழமுடியுமா?** என்ற உங்கள் இரண்டாம் கேள்விக்கு முடியாது என்பதுதான் என் பதில் ஆகும். ஆனால் இங்கேயும் **முயற்சிக்கிறோம்** என்ற பதிலைத்தான் நான் கூறமுடியும். இயேசு கிறிஸ்துவினால் தெரிந்தெடுக்கப்பட்ட பேதுரு உட்பட 12 சீஷர்களும்கூட இயேசுவைப்போல் வாழ முடியவில்லை. ஆனால் **பவுல் அப்போஸ்தலன்** மட்டும் இயேசுகிறிஸ்துவின் சகல அச்சடையாளங்களையும் என்னில் தரித்திருக்கிறேன். இயேசுவை அல்ல என்னை பாருங்கள் என்று கூறிய ஒரே நபர் **பவுல்** மாத்திரமே.

ஆனால் ஊழிய பாதைகளில், பரிசுத்தத்தில் அவர் இயேசுவைபோல பரிசுத்தமாக வாழமுடியாமல் போனாலும் ரோம 17ல் அவர் எழுதியபடி பாவ இச்சையையும் **ஜெயித்து** வாழ்ந்து காட்டினார். அதே சமயம் அவருக்குள் இருந்த மற்றொரு மாமிச பெலவீனமானது அடிக்கடி அவர் சாட்சியைக்குறித்து கேள்வி கேட்கும் வண்ணம் சீஷர்களுக்குள் பிரச்சனையை உண்டாக்கியது. அது **பெரிய பாவத்துக்குறிய** விஷயமல்ல, அது ஒரு மனித பலவீனம். மற்ற ஊழியக்காரர்களோடு அவரால் ஒத்துபோக முடியவில்லை. அடிக்கடி

தன்னோடு இணைந்து ஊழியம் செய்யும் நபர்களை மாற்றிக்கொண்டேயிருந்தார். ஆனால் அவர்களை பகைக்கவில்லை!, வெறுக்கவுமில்லை!. சீலாவோடும், பர்னபாவோடும் ஒத்துபோக முடியவில்லை. அதற்க்கு காரணம் பவுல் தாமதமாக இயேசுவை ஏற்றுக் கொண்டாலும் ஆவிக்குறிய ஜீவியத்தில் **பேதுருவை காட்டிலும்** குறுகிய காலத்தில் மற்ற எந்த சீஷர்களை காட்டிலும் மிகவும் **முதிர்ச்சி பெற்றவனாக** இருந்ததால் தன்னைபோலவே தன்னோடுள்ள ஊழியர்களும் வாழவேண்டும் என்று எதிர்பார்த்தார். அவருடைய **ஆவிக்குறிய வேகத்துக்கு** சீஷர்கள் யாரும் ஈடு கொடுக்கமுடியவில்லை. இதே நிலைதான் பல **ஊழியர்களின் குடும்பத்திலும்** பிரச்சனைக்கு காரணமாக இருக்கிறது. தன்னுடைய ஆவிக்குறிய முதிர்ச்சியின்படியே தன் மனைவியையும் அல்லது தன்னுடைய கணவனும் வாழவேண்டும் என்று எதிர்ப்பார்ப்பது நல்லது. ஆனால் அது இயலாத காரியம். ஆனால் மனைவியின் அல்லது கணவனின் ஜெப வாழ்க்கை அல்லது ஆத்மபாரம் ஆவிக்குறிய முதிர்ச்சி அவர்களிடம் காணமுடியாவிட்டால் யாரும் யாரையும் கட்டாயப்படுத்தகூடாது. ஆவிக்குறிய ஊழிய வாஞ்ஜை தம்பதியரில் யாருக்கு இல்லையோ அவர்களோடு இணைந்து ஜெபிக்கவே முடியாதே! கடமைக்காக ஜெபிக்கலாம். அவ்வளவே!

மத் 18:19 உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டி கொள்ளபோகிற எந்த காரியத்தை குறித்தாகிலும் பூமியிலே ஒரு **மனப்பட்டிருந்தால் பரலோகத்திலிருக்கிற** என் பிதாவினால் அது (அதாவது ஜெபிக்கிற காரியம்)அவர்களுக்கு உண்டாகும் என்று இயேசு கூறினார்.

ஆகவே ஆவிக்குறிய ஜீவியத்திலும், ஜெப ஜீவியத்திலும் கணவன்-மனைவியான உங்களில் யாராவது உங்களைவிட குறைந்து காணப்பட்டால் அவர்களை வெறுக்காதீர்கள். அல்லது உங்களை விட ஜெப ஜீவியத்தில் குறைவாய் காணப்படுகிறவர்களை அலட்சியப் படுத்தாதீர்கள். அது குடும்ப சமாதானத்தை கெடுத்துவிடும். உங்கள் ஆவிக்குறிய ஜீவியத்துக்கு **சமமாக, இணையாக** யார் வர முடியவில்லையோ அவர்களுக்காக ஜெபியுங்கள். அந்த ஜெபத்தையும் அந்த நபருக்குமுன் அவர்கள் கேட்கும்படி சத்தமாக ஜெபிக்கக்கூடாது. அது அவர்களது குறையை நீங்கள் சுட்டி காண்பிப்பதுபோல ஆகும். அப்படி நீங்கள் தொடர்ந்து அவர்கள் கேட்கும்படி சத்தமாக ஜெபித்தால் அவர்களுக்கு ஜெபத்தின் மீதே வெறுப்பு உண்டாகும். சுபாவத்தை மாற்றுகிறவர் நம் தெய்வம் மட்டும்தான். கர்த்தாவே, என் ஊழியத்தில் என்னைபோல் ஊழியம் செய்ய என் மனைவியை அல்லது என் கணவனை **தகுதிபடுத்தும்** என்று ஜெபியுங்கள். ❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**கேள்வி: பழைய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவை குறிக்கும் வார்த்தை பிதாவை குறிக்கும் வார்த்தை சில சமயம் தேவதூதர்களைக்கூட கடவுளாக சித்தரிப்பதைக் குறித்தும் எழுதப்பட்டுள்ளது அதைக்குறித்து விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.**

**பதில்:** ஆங்கில வேதத்தில் இந்த வித்தியாசங்களை அறியலாம் என்றாலும் Jehovah என்பதை LORD என்றும் **தேவன்** என்று தமிழில் உபயோகிக்கும் வார்த்தைக்கு GOD என்று எழுதியிருப்பார்கள். ஆனால் சில இடங்களில் ஒருவருக்கே LORD, GOD என்ற பதத்தையும் உபயோகித்திருக்கிறார்கள். மொழிபெயர்ப்பில் சில பிரச்சனைகள் உண்டு. பிதாவை குறிக்க LORD என்ற பதத்தையும், குமாரனை குறிக்க GOD என்ற பதத்தையும்

விக்கிரகங்களை குறிப்பிடும்போது Other God-என்றும் தமிழில் தேவர்கள் என்றும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது குறிப்பாக விக்கிரகங்கள் எதுவானாலும் தமிழ் வேதத்தில் **தேவர்கள்-தேவன்** என்றுதான் மொழி பெயர்த்துள்ளார்கள். ஆனால் முன்பு நான் குறிப்பிட்டதுபோல நம்முடைய கர்த்தரையும் சில இடங்களில் **தேவன்** என்று மொழி பெயர்த்துள்ளார்கள் என்பதையும் அறியவேண்டும். அப்படியே நம் வேதத்தில் **தூதர்கள் ரூபத்திலும்** கர்த்தர் வெளிப்பட்டார் என்பதை வாசிக்கிறோம். இந்த விஷயத்தைப்பற்றி சென்னை Dr.சேவியர் அவர்கள் தெளிவாக எழுதியுள்ளார். அதையே நீங்கள் வாசித்து அறிந்துக் கொள்ளலாம். ஆனால் விக்கிரங்களை குறிப்பிடும்போது **GOD** என்ற வார்த்தையை Capitalலில் எழுதாமல் Small லெட்டரில் god என்று குறிப்பிட்டிருப்பதை கவனிக்கவும்.

# பழைய ஏற்பாட்டில் உள்ள கர்த்தருடைய தூதனானவர் யார்?

கர்த்தருடைய தூதன் என்ற பெயரில் பழைய ஏற்பாட்டில், ஆதி.16:9, 22:11, 48:16, யாத்.3:2, 14:19, எண்.22:22, நியா.2:4, 6:11, 13:3, 2 ராஜா 19:35, ஏசா.63:9, சக.1:12, 12:8 போன்ற பல சவனங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆதி.16:7ல் **யெகோவாவின் தூதர்** என்றும், ஆதி.21:17ல் தேவனுடைய தூதர் என்றும், தேவனுடைய சமூகத்தின் தூதனானவர் என்றும் ஏசா.63:9லும், உடன்படிக்கையின் தூதர் எனவும் மல்.31லும் எழுதப்பட்டிருக்கிறது. இந்த தூதனானவர் தன்னை, **கர்த்தர்-யோகோவா-தேவன்** என்றே வெளிப்படுத்துகிறார். உதாரணத்திற்கு, யாக்கோபிடம் சொல்லும்போது. I am The God of Bethel- **"நான் பெத்தேலின் தேவன்"** என்கிறார் (ஆதி.31:11-13). மோசேயிடம் சொல்லும்போது, "நான் **ஆபிரகாமின் தேவனும்**, ஈசாக்கின் **தேவனும்** யாக்கோபின் **தேவனுமாகிய** உன் பிதாக்களுடைய **தேவன்**" என்கிறார். (யாத்.3:2-6). இந்த தூதனானவருக்கு, **தெய்வீகம், முழுமையாய் இருக்கிறது**. அதனால் தான் **ஆகாரிடம்** "உன் சந்தியை மிகவும் பெருகப்பண்ணுவேன்" என்றும், **"காண்கிற தேவன்"** என்று ஆகார் சொல்லும்படியாகவும் இவர் இருக்கிறார்(ஆதி.16:10,13). அதனால்தான் யாக்கோபுகூட, "எல்லாத் தீமைக்கும் நீங்கலாக்கி **என்னை மீட்ட தூதனானவர்** என்கிறான். மட்டுமல்ல... **வேதவசனத்தின்படி மனிதர்கள் சாதாரண தூதர்களுக்கு ஆராதனை பண்ணக்கூடாத** நிலையில் (வெளி.22:8,9). இந்த தூதனானவர்மட்டும் **தன்னை வணங்க**த்தக்கதான வார்த்தைகளை மோசேயிடம் கூறுகிறார் (யாத்.3:5,6).

எனவேதான் இந்த தூதனானவரை **தேவனென்றே அறியலாம்**. யாராலும் காணக்கூடாத தேவன், **மனிதர்கள் காணும்படியானவராய் தூதனானவர்** வெளிப்பட்டார் என்று அறியலாம். மேலும்... நியா.13:18ல் இந்த தூதனானவர் **"அதிசயம்"** என்ற பெயரில் வெளிப்பட்டார். **இவரே இயேசுவாய் வந்தவர்** என ஏசா.9:6ன் மூலம் அறியலாம். மேலும், இந்த ஆண்டவரும் தூதனுமான இவர்தான் **"தம்முடைய ஆலயத்திற்கு தீவிரமாய் வருவார்"** என்று மல்.3:1ல் சொன்னபடி **வந்தவர் இயேசுகிறிஸ்து தானே! பழைய ஏற்பாட்டில்** வெளிப்பட்ட **கர்த்தருடைய** தூதனானவர் **வார்த்தையாகிய தேவன்** என்றே உணரலாம். **கர்த்தருடைய தூதனானவர்** என்ற பெயர் புதிய ஏற்பாட்டில்-கிரேக்க மொழியில்-

யாருக்கும் கொடுக்கப்படவில்லை. KJV மொழிபெயர்ப்பு மட்டும் மத்.1:20, 2:13, 28:2, லூக்.2:9, அப்.5:19, 12:7, 23 போன்ற இடங்களில் தவறாய் மொழி பெயர்த்துள்ளார்கள். தூதர்களைப்பற்றிய விவரத்தை இதோடு முடிக்கிறேன். இப்படிப்பட்ட **ஆவிக்குரிய கேள்விகள்** கேட்பதைத்தான் நான் மிகவும் விரும்புகிறேன். எவ்வளவுகெவ்வளவு கேள்வி கேட்கிறேமோ அவ்வளவுக்களவு ஆவிக்குரிய ஜீவியத்தில் வளரமுடியும். ❖❖❖❖❖❖❖❖❖❖

**கேள்வி:** உங்கள் 78 வருட அனுபவத்தில் சிஎஸ்ஐ சபையின் ஆயர்கள் யாராவது, சபையில்உள்ள அங்கத்தினர்களுக்காக,விசுவாசிகளுக்காக தனிப்பட்ட முறையில் உண்மையாய் ஜெபித்தார்கள் என்பதை அறிந்திருக்கிறீர்களா?

**பதில்:** இருக்கிறார்கள். மிகவும் குறைவானவர்களாக விரல்விட்டு என்னும் அளவு ஒரு சில ஆயர்கள் இருக்கிறார்கள். பெரும்பாலான ஆயர்கள் மொத்தமாக பெதுவாக ஜெபம் செய்பவர்கள்தான். அதாவது எங்கள் சபையில் உள்ள அனைத்து வியாதியஸ்தர்களுக்காக வும், பிரச்சனையில் உள்ளவர்களுக்காகவும் ஜெபிக்கிறேன் என்று கூறி ஜெபிப்பவர்கள்தான் உண்டு. பிரச்சனையில் உள்ளவர்களின் பெயர்களை எழுதி வைத்து ஒன்றன்பின் ஒன்றாய் அவர்களுக்காக ஜெபிப்பவர் மிகவும் அரிது!. அரிதிலும் அரிது!.

எனக்கு தெரிந்து 1965ம் வருடம் **திருப்பூர்** என்ற ஊருக்கு VBS நடத்த சென்ற போது(கோயமுத்தூர் டையோசிஸ்ஸில்) சிஎஸ்ஐ சபையின் ஆயர் Rev.W.C.DAVID என்பவர் வீட்டில் தனி அறையில் தங்கியிருந்தேன். அதிகாலை 5 மணிக்கு குடும்ப ஜெபம் செய்வார்கள். அதற்குமுன் ஆயர் அவர்களும், அவர் மனைவியும் தனியாக பிரச்சனை உள்ளவர்களுக்காக வும், வியாதியில் உள்ளவர்களின் பெயர்களையும் சொல்லிசொல்லி ஜெபிப்பார்கள். ஆயர் மறந்ததை ஆயர் மனைவி ஞாபகப்படுத்துவார்கள். அது எத்தனை அற்புதமான ஜெபம்.

**Rev. சிங்** ஆயர் அவர்கள், (சேலம் கிறிஸ்துநாதர் ஆலயத்தில் ஊழியம் செய்த) மறைந்த **Rev.ஜோஷி** அவர்கள், (திருநெல்வேலி டையோசிஸ்) **Rev.காந்தி செல்வன்** அவர்கள், **அம்பாசமுத்திரம்** சபையில் ஆயராக இருந்தபோது தனித்தனியாக பெயர் சொல்லி ஜெபிப்பார் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இப்படி இன்னும் தனி ஜெபத்தில் ஜெபிக்கும் ஆயர்கள் இருக்கலாம். எனக்கு தெரியாது!. ஆனால் அவர்களெல்லாம் மிகமிக குறைவான எண்ணிக்கையில் உள்ளவர்களாகத்தான் இருப்பார்கள். சிஎஸ்ஐயில் சில உபதேசியார்களை அறிவேன். அவர்களும் அப்படி ஜெபிப்பார்கள்.

**சகோ.D.G.S.தினகரன்** அவர்கள் மேட்டூரில் SBI வங்கியில் கிளை மேனேஜராக பணியாற்றி ஊழியம் ஆரம்பித்த **ஆரம்ப நாட்களில்** அப்படி ஜெபித்தார். அவர் வீட்டில் நான் தங்கிய நாட்களில் அதை கண்டிருக்கிறேன். **இயேசு அழைக்கிறார்** தொடங்கியபின் பொதுவான மொத்த ஜெபம்தான் செய்தார்.கடிதங்கள் அத்தனையையும் ஜெபகுறிப்பு தாளையும் அதேனாடு சேர்த்துவைத்து தன் கைகளை வைத்து மொத்த ஜெபம் செய்ய ஆரம்பித்துவிட்டார். ஆயர்கள் பெரிய சபைகளுக்கு மாற்றல் கிடைத்தால் 700 அல்லது 1000 அங்கத்தினர் உள்ள சபையில் ஊழியம் செய்யும்போது தனித்தனியாக **அங்கத்தினருக்காக** ஜெபிப்பது கடினம். ஆனால் **வியாதியஸ்தர், பிரச்சனைஉள்ள** குடும்பங்களின் பெயர்களை உச்சரித்து ஜெபிப்பது **சக்தியுள்ள ஜெபமாக** இருக்கும்.

Rev.DAVID சேலம் கிறிஸ்துநாதர் ஆலயத்துக்கு மாற்றலாகி வந்தபோது ஆயிரக்கணக்கான அங்கத்தினர்கள் உள்ள சபையாக அது இருந்தாலும் பிரச்சனை உள்ளவர்களின் பெயர்களை தனியாக எழுதி வைத்து ஜெபித்ததாக அவர் கூறி நான் கேட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட **மேய்ப்பர்கள்தான் உண்மையான மேய்ப்பர்கள்** ஆகும்.

❖ LEF சபைகளில் உள்ள சபை விசுவாசிகள் பெரும்பாலானவர்கள் தனித்தனியாக பெயர் சொல்லி ஜெபிப்பதை அறிவேன்.

❖ TPM சபையில் அதிகாலையில் பாஸ்டரும், அந்த சபையில் ஊழியம் செய்யும் சகோதரிகளும் இணைந்து பிரச்சனை உள்ளவர்கள், குறிப்பாக வியாதி உள்ளவர்களுக்காக தனித்தனியாக பெயர்சொல்லி ஜெபிப்பதை அறிவேன். சென்னையில் TPM பாஸ்டர் ஒருவர்தான் தனி ஜெபத்தில் அப்படி ஜெபிப்பார். இந்துமத மக்களும்,கிறிஸ்தவர்களும் அவரை தேடி வந்து ஜெபித்து போவார்கள். அவர் இறந்துபோனார். அவர் பெயர் மறந்துவிட்டேன். இப்படிப்பட்ட ஊழியர்கள் **ஆயர்களாக, பாஸ்டர்களாக ஊழியம் செய்யும் சபை மிகவும்** ஆசீர்வதிக்கப்பட்ட சபையாகும். **லூத்தரன் சபை** ஆயர்களில் தனித்தனியாக வியாதிஸ்தருக்காக ஜெபிக்காமல் போனாலும், மொத்தமாக பெதுவாக ஜெபம் செய்யும் ஆயர்கள் அந்த சபைகளில் ஒன்று, இரண்டுபேர் மட்டும் இருப்பார்கள் என்று கூறலாம். நாம் யாவரும் மற்றவர்களுக்காக ஜெபிக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். மொத்த ஜெபம் அல்ல - நம்மை நம்பி ஒருவர் ஜெபிக்க கேட்டுக்கொள்ளும்போது அந்த நபர்களுக்காக அவர்கள் **பெயர் சொல்லி** அல்லது அவர்கள் முகத்தை ஜெபிக்கும்போது நம் மனகண் முன் கொண்டுவந்து ஜெபித்தால் அந்த ஜெபத்துக்கு நிச்சயம் பலன் உண்டாகும்.

**இயேசுவும் மாம்சத்தில் இருந்த நாட்களில் ஆத்துமாக்களுக்காக பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணினார்.** எபே 5:7. ❖❖❖❖❖❖

## மரண அறிவிப்பு:




பிரபல கிறிஸ்தவ பாடகியான **திருமதி.ஹெலன் சத்தியா** அவர்கள் 2019 ஏப்ரல் 29ம் தேதி காலமானார். அவரின் வித்தியாச மான குரல் சிஎஸ்ஐ, லூத்தரன் சபை கிறிஸ்தவர்களை மிகவும் கவர்ந்தன. கிறிஸ்தவ திருமண பாடல்களையும், கீர்த்தனை பாடல்களையும் சபையில் பாடும் ஞானப்பாடல்களையும் பாடி பிரபலம் அடைந்தவர். என்னோடு அதிகம் தொடர்பு கொண்டவர். புதிய சிடிகள் பதிவு செய்யும்போதெல்லாம் என்னோடு தொலைபேசியில் தொடர்புகொண்டு ஜெபிக்ககேட்டுக்கொள்வார்.

**கணவர், மகன்,மருமகன்,மகள்,மருமகள்** யாவரும் குடும்பமாக இசைக்குழு அமைத்து குழுவாக அழைக்கும் இடங்களில் இசை கூட்டம் நடத்துவார்கள். தன் கணவன் இறந்த பின்னும் சோர்ந்துபோகாமல் தன் பிள்ளைகளை வைத்து இசை நிகழ்ச்சிகளை நடத்தி வந்தார். வயது அதிகமானாலும் குரலில் பிசிறு இல்லாமல் குரல்வளம் மாறாமல் பாடும் கிருபையை பெற்றவர்.

**தாயும்,தந்தையும்** இறந்தநிலையில் இவர்கள் பிள்ளைகளுக்கு, பேரப்பிள்ளைகளுக்காக கர்த்தர் ஆறுதல் தர ஜெபிப்போம்.

# திருமணத்தைக்குறித்தும் ஆண் - பெண் சேர்க்கை குறித்து கிறிஸ்தவ வேதம் கூறுவதென்ன?



**குறிப்பு:** கீழ்காணும் வசனங்களில் **நிர்வாணம் - சேரக்கூடாது, சயனித்தல், சேருதல்,** மற்ற **மொழிப்பெயர்ப்புகளில்** உபயோகிக்கபட்ட வார்த்தை, You Shall Not Mary (Marriage), (NIV), Sexual Relation Rapes,(கத்தோலிக்க வேதம்) வெற்றுடம் பார்க்காதே, (பொது மொழிப்பெயர்ப்பு) **திருமணம் செய்யாதே,** இந்த அர்த்தங்களை கருத்தில் கொண்டு குறிப்பிட்ட விஷயங்களைக் குறித்து விவரம் அறிந்துக்கொள்ளுங்கள்.

1. ஒருவன் தனக்கு நெருங்கின இனமாகிய ஒருத்தியிடம் சேரக்கூடாது.(சரீர உறவு கூடாது) (லேவி.18:6)

2. தகப்பனையாவது, தாயையாவது நிர்வாணமாக்கலாகாது.(சரீர உறவு கூடாது) (லேவி.18:7)

3. தகப்பனுக்காவது, தாய்காவது வீட்டிலிருக்கும் புறத்தியானுக்கும் பிறந்த குமாரத்தியை நிர்வாணமாக்கலாகாது.(சரீர உறவு கூடாது) காரணம், அவள் உன் சகோதரி. (லேவி.18:9)

4. குமாரனுடைய மகளை குமாரத்தியின் மகளை நிர்வாணமாக்கக்கூடாது.(சரீர உறவு கூடாது) (லேவி.18:10)

5. தகப்பனுடைய சகோதரியை நிர்வாணமாக்கலாகாது.(சரீர உறவு கூடாது) (லேவி.18:12)

6. தாயினுடைய சகோதரியை நிர்வாணமாக்கலாகாது.(சரீர உறவு கூடாது) (லேவி.18:13)

7. தகப்பனுடைய சகோதரன் மனைவியை நிர்வாணமாக்கலாகாது.(சரீர உறவு கூடாது) (லேவி.18:14)

8. மருமகளை நிர்வாணமாக்கலாகாது.(சரீர உறவு கூடாது) (லேவி.18:15)

9.சகோதரனுடைய மனைவியை நிர்வாணமாக்கலாகாது.(சரீரஉறவுகூடாது) (லேவி.18:16)

10. மனைவி உயிரோடுயிருக்கையில் அவள் சகோதரியை விவாகம் பண்ணகூடாது. அவளை நிர்வாணமாக்கலாகாது.(சரீரஉறவு வைத்துக்கொள்ளகூடாது) (லேவி.18:18)

11. பிறனுடைய மனைவியோடே சேர்ந்து, அவளை நிர்வாணமாக்காதே,(சரீர உறவு வைக்காதே) அவளால் உன்னை தீட்டுப்படுத்தாதே. (லேவி.18:20)

12. பெண்ணோடு சம்யோகம் பண்ணுகிறதுப்போல,(சரீர உறவு வைத்துக் கொள்வதைப்போல) ஆணோடு சம்யோகம்(சரீர உறவு வைக்கக்கூடாது) பண்ணவேண்டாம். அது அருவருப்பானது. (லேவி.18:22)

13. மிருகத்தோடு நீ புணர்ச்சி செய்து உன்னை தீட்டுப்படுத்தாதே. (லேவி.18:23)

14. ஸ்திரீயானவளும் மிருகத்தோடு புணரும்படிக்கு அதற்கு முன்பாக நிற்ககூடாது. (லேவி.18:23)

15. ஒருவன் பிறனுடைய மனைவியோடே(சரீர உறவு கொண்டால்) விபச்சாரம் செய்தால், அந்த விபச்சாரகாரனும்,அந்த விபச்சாரியும் கொலை செய்யப்படவேண்டும். (லேவி.20:10)

16. புருஷனுக்கு விவாகம் பண்ணப்பட்ட ஸ்திரீயோடு ஒருவன் சயனித்தால்,(சரீர உறவு வைத்தால்) இருவரும் சாக வேண்டும். (உபா.22:22)

17. கன்னிகையான பெண் ஒருவனுக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், மற்றொருவன் அவளோடு சயனித்து, (சரீர உறவு வைத்தால்) அவள் கூக்குரலிடாததினால், அவர்கள் இருவரும் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும். (உபா.22:24)

18. ஒருவனுக்கு நியமிக்கப்பட்ட பெண்ணை, பலவந்தமாய் பிடித்து, அவளோடு ஒருவன் சயனித்தால்,(சரீர உறவு வைத்தால்) அவன் மாத்திரம் சாககடவன். (உபா.22:25)

19. நியமிக்கப்படாத கன்னியாஸ்திரீயாகிய ஒரு பெண்ணை ஒருவன் கைப்படித்து அவளோடு(சரீர உறவு வைத்தால்) சயனித்து, அவன் அவளை கற்பழித்தபடியினால் அவள் அவனுக்கு **மனைவியாகவேண்டும்**. அவன் உயிரோடிருக்குமளவும் அவளை தள்ளிவிடக்கூடாது. (உபா.22:29)

20. ஒருவன் தன் தகப்பன் மனைவியோடே (தன் தாயின் இரண்டாம் கணவனுடைய

மனைவியுடன் சரீர உறவு வைத்தால்) சயனித்தால் இருவரும் கொலை செய்யப்பட வேண்டும். இரத்தப்பழி அவர்கள் மேல். (லேவி.20:1)

21. மருமகளோடே(மாமனார்) சரீர உறவு வைத்தால் ஒருவன் சயனித்தால் இருவரும் கொலை செய்யப்படவேண்டும். இது அருவருப்பான தாறுமாறு. (லேவி.20:12)

22. **பெண்ணோடு** சம்யோகம் (சரீர உறவு வைப்பதுபோல)பண்ணுகிறதுபோல ஆணோடு (சரீர உறவு)சம்யோகம் பண்ணவேண்டாம். அது அருவருப்பானது. இருவரும் கொலைசெய்யப்படவேண்டும். அவர்கள் இரத்தப்பழி அவர்கள் மேல். (லேவி.20:13)

23. ஒருவன் ஒரு ஸ்திரீயையும் அவள் தாயையும் (சரீர உறவுவைத்தால்) சேர்ந்தால் அது முறைகேடு. மூவரும் அக்கினியினால் சுட்டெரிக்கப்படவேண்டும். (லேவி.20:14)

24. மிருகத்தோடு (சரீர உறவுவைத்தால்)புணர்ந்தால் அவனும் அந்த மிருகமும் கொல்லப்படவேண்டும். (லேவி.20:15)

25. மிருகத்தோடு(சரீர உறவு வைத்தால்) புணர்ந்தால் அவளும் அந்த மிருகமும் கொல்லப்படவேண்டும். (லேவி.20:16)

26. ஒருவன் தன் சகோதரியின் நிர்வாணத்ததையும் அவள் அவனுடைய நிர்வாணத்தையும் பார்த்தால் அது பாதகம். அவர்கள் தங்கள் அக்கிரமத்தை சுமக்க வேண்டும். (லேவி.20:17)

27. தகப்பனுடைய சகோதரி, தாயின் சகோதரியை(சரீர உறவு வைக்ககூடாது) நிர்வாணமாக்க கூடாது. அவன் தன் நெருங்கிய இனத்தை (இரத்த சொந்தத்தை) அவமானமாக்கினான். (லேவி.20:19)

28. ஒருவன் தன் தகப்பனின் சகோதரனாகிய மனைவியோட சயனித்தால் (சரீர உறவு வைத்தால்)அவர்கள் தங்கள் பாவத்தை சுமப்பார்கள். சந்தானம் இல்லாமல் சாவார்கள். (லேவி.20:20)

29. ஒருவன் தன் சகோதரன் மனைவியை விவாகம் பண்ணினால் அது அசுத்தம். அவர்கள் சந்தானம் அற்றவர்களாய் இருப்பார்கள். (லேவி.20:21)

30. நீ உன்னை தீட்டுப்படுத்துகிறாய்-உன் தேசமும் தீட்டுப்பட்டிருக்கும். (லேவி.18:24)

31. இதை செய்யும் போது உன் ஆத்துமா ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போகும். (லேவி.18:29)

32. அருவருப்பான முறைமைகளினால் யாதொன்றை நீ செய்து அவைகளால் உன்னை தீட்டுப்படுத்தாதே. (லேவி.18:30)

33. **தேசம் எங்கும் முறைகேடான பாவம் நிறைந்திருக்கிறது.** (லேவி.19:29)

34. **நீங்கள் என்னுடையவர்களாய் இருக்கும்படிக்கு உங்களை மற்ற ஜனங்களை விட்டு பிரித்தேன்.** (லேவி.20:26).

மேலே குறிப்பிட்ட வசனங்கள் நியாபிரமாண காலத்தில் தீர்க்கதரிசிகளோ, வேதவசன உபதேசங்களோ, உபதேசிக்கும் ஊழியர்களோ இல்லாத காலத்தில் கொடுக்கப்பட்ட கட்டளையாகும். **ஆவிக்குறிய முதிர்ச்சியற்ற** காலத்தில் பரிசுத்தமாக வாழவேண்டும் என்பதற்காக எழுதப்பட்ட கட்டளையாகும். மக்கள் ஆவிக்குறிய முதிர்ச்சியடைந்தபிறகு கிறிஸ்துவின் உபதேசம் எப்படி மாறுகிறது என்ற கவனியுங்கள். மேலே உள்ள அத்தனை விதமான பாவச்செயல்களையும் **ஒரே வார்த்தையில்** அடக்கிவிட்டதை கவனியுங்கள்.

**ஒரு பெண்ணை** (அது யாராக இருந்தாலும் சரி) **இச்சையோடு பார்த்தாலே விபச்சாரம் செய்து ஆயிற்று** என்று இயேசுகிறிஸ்து கூறுகிறார். (விபச்சாரத்துக்கு சமம் என்று கூறவில்லை, விபச்சாரம் செய்து ஆயிற்று என்கிறார்) **பழைய ஏற்பாட்டுக்கும் - கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்துக்கும் எத்தனை வித்தியாசம்** பாருங்கள். இவைகள் எல்லாம் ஏன் எழுதினேன் என்றால் **மனித உரிமை** என்ற பெயரில் **ஆண்-பெண் உறவுகள்** கட்டுபாடற்ற **சோதோம்-கொமாரா** பாவத்துக்கு **சுப்ரீம் கோர்ட்** அனுமதி கொடுத்துவிட்டது. அதைவிட **CSI சபை மாடரேட்டரின்** அறிக்கையில் 3rd Genderஐ(மூன்றாம் பாலினத்தவரை) சபையில் இணைக்கப்படவேண்டும் என்றும், Earth Bible Sermons(Volume 1) என்ற புதிய பைபிள் பிரசங்க புத்தகத்தின் அறிமுகம் இவைகள் யாவும் இந்திய சுப்ரீம் கோர்ட்டின் பாவ தீர்ப்புக்கு துணைபோகிறது. இவைகளைப்பற்றி சினாடில் கேள்வி கேட்பார் யாரும் இல்லை. சிஎஸ்ஐ மாடரேட்டரின் உபதேசங்களிலிருந்து உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் காப்பாற்றிக்கொள்ளுங்கள். ❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## நன்றி:

உங்கள் காணிக்கைகள் யாவும் கிடைத்தது. நன்றி. Money Transfer & Online மூலமாக அனுப்பியது யாவும் வந்து சேர்ந்தது. வங்கி வழியாக பணம் அனுப்பியவர்கள் நீங்கள் அனுப்பிய தொகை,உங்கள் **பெயர்**,எந்த **வங்கி**(SBI or Canara)என்பதையும் உங்கள் கைபேசி எண்ணையும் SMS செய்ய புதிய கைபேசி(**9894261333**) எண்ணை உபயோகிக்கலாம். இமெயில் வழியாக அனுப்புவதைவிட இது உங்களுக்கு சுலபமாகவும், சௌகரியமாகவும் இருக்கும். இந்த மொபைலை பேச உபயோகிக்கவேண்டாம். SMS அனுப்ப மட்டும் உபயோகிக்க கேட்டுக்கொள்கிறேன்.

**YOU TUBEல் வந்த செய்தி:**


# தமிழ் கிறிஸ்தவ ஜெப மாநாடு:
# இயேசுகிறிஸ்து ஒரே வழி:

## தமிழ் கிறிஸ்தவ ஜெப மாநாடு - 24 பிப்ரவரி 2019

## இடம்: NLCC(AG சபை) சென்னை. பாஸ்டர்.மோகன்.

**இந்த மாநாட்டின் நோக்கம் என்ன**? அனைத்து கிறிஸ்தவ சபைகளையும் **Body of Christ** என்ற ஒரு அமைப்பின் கீழ் கொண்டுவருவதாகும். அந்திக்கிறிஸ்து தன் ஆட்சியை நிறைவேற்ற ஒரே அமைப்பு, ஒரே ஒரு உலக சபை. இதை ஏற்றுக்கொள்கிறவர்கள் மனிதர்களின் ஆலோசனையைப்பின்பற்றி கொண்டு வேதம் முன் அறிவித்த **"விசுவாச துரோகத்திற்கு"** இடம் கொடுக்கிறீர்கள். ஏன்?

**ரோமன் கத்தோலிக்க** மக்கள் நமக்கு நண்பர்களாக இருக்கலாம். ஆனால் அவர்கள் சார்ந்து இருக்கிற சபை எப்படிப்பட்டது என்றும், அவர்களின் கொள்கைகளையும் நாம் அறிய You Tube வீடியோவில் வந்தது.



**போப்பிற்கு** பின்னால் உள்ள **சிலையை பாருங்கள். பிசாசை** போன்ற உருவம் அது என்ன?. தேவனுக்கு உருவம் இல்லை. ஆனால் பின்னாலுள்ள வித்தியாசமான இந்த சிலைகள் என்ன என்பதை நீங்களே ஊகித்துக்கொள்ளுங்கள். இந்த கத்தோலிக்கர்களோடு இணைந்து கிறிஸ்தவர் எழுப்புதல் என்று பேசும் உபதேசம் எங்கிருந்து வந்தது என்பதை அறியுங்கள்.

**உங்களுக்கு** தீர்க்கதரிசனம் சொல்லுகிற **தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக்** கேளாதிருங்கள். அவர்கள் உங்களை வீண் பெருமை கொள்ளும்படி செய்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய வாக்கை அல்ல, **தாங்கள் யூகித்த தரிசனத்தைச் சொல்லுகிறார்கள்** என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். எரேமியா 23:16.

**கள்ளத்தீர்க்கதரிசிகளும்** ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள். அப்படியே உங்களுக்குள்ளும் **கள்ளப்போதகர்கள்** இருப்பார்கள். அவர்கள் கேட்டுக்கேதுவான **வேதப் புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணி,** தங்களைக் கிரயத்துக்குக்கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக் கொள்ளுகிறார்கள். அவர்களுடைய கெட்ட நடவடிக்கைகளை அனைத்து கிறிஸ்தவ சபைகளின் ஐக்கியம் என்ற பெயரில் AOG **பாஸ்டர்.மோகனைப்போல்** அநேகர் பின்பற்றுவார்கள். அவர்கள் நிமித்தம் சத்திய கிறிஸ்தவ மார்க்கம் தூஷிக்கப்படும்.இவர்கள் பொருளாசையுடையவர்களாய், தந்திரமான வார்த்தைகளால் உங்களைத் தங்களுக்கு ஆதாயமாக வசப்படுத்திக் கொள்ளுவார்கள். ஜாக்கிறதை!. யார் என்ன சொன்னாலும் இன்று **கைகளை தட்டி அல்லேலுயா,ஆமென்** என்று கூறும் கூட்டம் பெருகிகொண்டிருக்கும் அவல நிலை. கிறிஸ்தவ சபைகளிடம் பெருகிவிட்டது. தேவன் நம் கையில் **வேத புத்தகத்தை** கொடுத்து, நம்மை **எச்சரித்த பிறகும், வேதத்தை புறக்கணித்து காதுகளுக்கு இனிய வார்த்தை** பேசும் பொய் ஊழியர்களை நம்பி ஓடும் கூட்டங்கள் பெருகிவிட்டன. அப்படிப்பட்ட மாநாட்டு கூட்டம்தான் சென்னை AOG சபையில் நடந்தது. AOG சபை பாஸ்டர்.மோகன் அவர்கள் கூட்டிய **தமிழ் கிறிஸ்தவ ஜெப மாநாடு** என்ற இக்கூட்டத்தின் மிக பெரிய **விசுவாச துரோகம்** என்ன? ரோமன் **கத்தோலிக்க** சபையோடு **கை குலுக்கியவர்கள் யார்** என்பதை கவனியுங்கள். அவர்கள் யாவரும் **பெந்தேகோஸ்தே மற்றும் சிஎஸ்ஐ சபைகள்** ஆகும். AOG பாஸ்டர்.மோகன் அவர்கள் இவர்கள் பின்னால்போனதுதான் ஆச்சரியம். மார்டின்லூத்தர் இப்படிப்பட்டவர்களிடத்திருந்து பிரித்து நம்மை காப்பாற்றினார். ஆனால் AOG **பாஸ்டர்.மோகன்** இவர்களோடு நம்மையும், AOG சபை விசுவாசிகளையும் விக்கிரக ஆராதனைகாரர்களோடு சேர்க்கிறார்.

❖ இவர்கள் கூறும் இந்த Body of Christ என்பதின் தொடக்கம் எங்கே என்பதை புரிந்துக்கொள்ளுங்கள்.(இதைக்குறித்து முன்பே ஜாமக்காரனில் எழுதியுள்ளேன்).

The World Council of Churches(WCC) is an **international ecumenical union** of roughly **340 denominations** in 120 countries representing more than 500 million professing Christians(including the millions whose only christian testimony is that they were baptized as infants.) It was officially formed in **Amsterdam, Holland,** in 1948 with 147 denominations. **The World Council of Churches**(WCC) **உலக சபைகளின் ஐக்கியம்** என்ற அமைப்பு 1948ம் ஆண்டு **ஹாலந்து** தேசத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இது 340 கிறிஸ்தவ பிரிவுகளை உள்ளடக்கியது. இதில் தேவ வசனத்திற்கு விரோதமான **ரோமன் கத்தோலிக்க சபையும்** அடங்கும். WCC இன் நோக்கம் **ஒரே ஒரு உலக சபை** உருவாக வேண்டும் என்பதாகும். இது ஒரு பிசாசின் வஞ்சனையுள்ள பயங்கர திட்டமாகும்.

**கிறிஸ்துவின் வசனம்** நம்மை பரிசுத்த வாழ்க்கைக்கென்று பிரித்து எடுத்து இருக்கும்போது **பெந்தேகோஸ்தே** சபையினரும், கத்தோலிக்க சபையிலிருந்து **மார்டின் லூத்தர்** மூலமாக பிரிந்த **பிராட்டஸ்டன்ட் சபைகளும்** இப்போது மறுபடியும் இயேசுவை மறுதலிக்கும், விக்கிரகங்களை வணங்கும் ரோமன் கத்தோலிக்க சபையோடு சேர்ந்து கை கோர்த்து நின்றதை பார்த்தோம். **மார்டின் லூதர்**, ரோமன் கத்தோலிக்க சபையின் தவறான உபதேசங்களையும், போப்பின் அதிகாரத்தையும் எதிர்த்து தானே இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த வார்த்தைகளுக்காக துணிந்து பிரிந்து நின்றவர். இன்றோ அதே கத்தோலிக்க அதிகாரத்தோடு இணைந்து **கிறிஸ்துவை மறுதலிக்கும் AOG சபை பாஸ்டர்.மோகன்** போன்ற பிரபல போதகர்களை கண்டு மனம் பதைக்கிறது.

1கொரிந்தியர் 6ம் அதிகாரம், **அந்நியதுகத்திலே அவிசுவாசிகளுடன்** பிணைக்கப் படாதிருப்பீர்களாக. **நீதிக்கும்,அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும்,இருளுக்கும் ஐக்கியமேது?. கிறிஸ்துவுக்கும்,பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்கு பங்கேது?,தேவனுடைய ஆலயத்துக்கும்,விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது?,** நான் அவர்களுக்குள்ளே **வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன்,அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள்** என்று தேவன் சொன்னபடி நீங்களே ஜீவனுள்ள தேவனுடைய **ஆலயமாயிருக்கிறீர்களே,**ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானவைகளைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

**விக்கிரகங்களோடு** உண்மை கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு சம்பந்தம் ஏது? இந்த கூட்டத்தின் **பொய்எழுப்புதல்** உபதேசத்தைக்குறித்து இனியாவது ஜாக்கிறதையாக இருங்கள். **சபை வித்தியாசம்இல்லாமல்** எல்லோரும் இணைந்து நின்று **எழுப்புதலை காணப்போகிறோம்.** அதுதான் **இவர்களது வீரமுழக்கம்** என்று இவர்கள் கூறியது **பொய் எழுப்புதலாகும்.** ஆதலால் **பிரியமானவர்களே,இவைகளை முன்னமே நீங்கள் அறிந்திருக்கிறபடியால் அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே** நீங்கள் இழுப்புண்டு உங்கள் உறுதியிலிருந்து விலகி விழுந்துபோகாதபடிக்கு **எச்சரிக்கையாயிருங்கள்.** 2பேதுரு 3:17.

இதில் முழங்கிய **பெந்தேகோஸ்தே,AOG,IPC,CSI** சபை பாஸ்டர்களுக்கும், ஊழியர்களுக்கும் சில கேள்விகள்:

1). **மரியாளையும், புனிதர்கள்** என்று அழைக்கப்படும் மனிதர்களையும் வணங்கலாமா?.

**ஜாமக்காரன்:** செத்துப்போன **மரியளோடும், செயின்ட்** என்று அழைக்கப்படும் புனிதர்களோடும் வேண்டிக்கொள்கிறோம். **மரியே** என்று விண்ணப்பிக்கலாமா? பிர 9:5 **மரித்தவர்களால் எந்த பிரயோஜனமும் இல்லை** என்று வேதம் கூறுகிறது. உபா 18:10ல் **மரித்த ஆவிகளோடு பேசுகிறவன் சபிக்கப்பட்டவன்** என்று வேதம் எச்சரிக்கிறது.

**பரிந்து பேசுதல்:** நாம் இயேசுவிடம் பேசுமளவு தகுதிஉள்ளவர்கள் அல்ல, அதனால்தான் மரியளோடு எங்களுக்காக பரிந்துபேசும் என்று கூறி **அன்னை மரியே வேண்டிக்கொள்ளும்** என்கிறோம். 1தீமோ 2:5,6 **தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும்** ஒருவரே, இத்தனை தெளிவாக வேதம் **உபதேசிக்கும்போது** மரித்த **பரிசுத்தவான்களோடு** எப்படி பேச முடியும்?.

2). **விக்கிரகங்கள்** செய்து அதை வணங்கலாமா?

3). **போப்** - Holy Father என்ற **பொய்யை** ஒப்புக்கொள்கிறீர்களா?

4). கத்தோலிக்கர் செய்யும் **பூசை சரியானதா?,** 5). **இறந்தவர்களுக்காக** நாம் ஜெபிக்கலாமா?, 6). **மரியாள் இல்லாமல்** இயேசுகிறிஸ்து இல்லை என்று மார்தட்டும் கொள்கை உங்களுக்கு உடன்பாடா?, 7). இப்படிப்பட்ட **வேத புறம்பான சபையோடு** இணைந்து நீங்கள் **தேவ ராஜ்யத்தை** கட்ட போகிறீர்களா?

8). **மரித்தவர்களிடத்தில்** ஜெபிப்பது சரியா?, 9). பெந்தேகோஸ்தே மற்றும் சிஎஸ்ஐ சபைகளில் **சிலை வைத்துகொள்வீர்களா**?,

10). **எல்லா உபதேசமும்** ஒன்று என்றால் சபைகள் எல்லாம் **ஒரே உபதேசத்தை** கொள்ளலாமே? எதற்கு ஒவ்வொரு சபையும் வித்தியாசமாய் போதிக்கவேண்டும்?

11). பெந்தேகோஸ்தே சபைகளில் பிரசங்கிக்கப்படும் **இரட்சிப்பு** ரோமன் கத்தோலிக்க மக்களுக்கு தேவை இல்லையா?. மேலே எழுதப்பட்ட கேள்விகளை AOG சபை **பாஸ்டர் களிடம் அந்தந்த சபைமக்கள் கேள்வி கேட்கவேண்டும்.** சென்னை AOG **சபை மூப்பர்கள் கேள்வி** கேட்கவேண்டும். குறிப்பாக இந்த கூட்ட ஏற்பாடுகளை செய்த சென்னை AOG **பாஸ்டர்.மோகன்** அவர்களோடு அவர் சபை மக்களும், மற்ற AOG சபை மக்களும் கேள்விகேளுங்கள். இப்படிப்பட்ட **அந்திகிறிஸ்துவுக்கு** உதவி செய்யும் இப்படிப்பட்ட மாநாட்டை ஏன் கூட்டினீர்கள்?. அதை நடத்த ஏன் பொருப்பெடுத்தீர்கள்?. இதற்கு அவர்கள் கொடுத்த பெரும் தொகையான **அமெரிக்கன் டாலர்கள்** எவ்வளவு?. AOG சபை மக்களாகிய நாங்கள் உரிமையோடு கேட்கிறோம். நீங்கள் நடத்திய மாநாட்டின் கருத்து என்ன? என்று பாஸ்டர்.மோகனிடம் கேளுங்கள்.

❖ அன்று **எலியா தீர்க்கதரிசி**, பாகாலின் தீர்க்கதரிசிகளின் முன்பாக சொன்னார். நீங்கள் எந்த மட்டும் குந்தி,குந்தி நடப்பீர்கள்? **கர்த்தர் தெய்வமானால்** கர்த்தரை சேவியுங்கள். **பாகால்** தெய்வமானால் பாகாலை சேவியுங்கள்.1 இராஜாக்கள் 18. எங்கே போனது **கர்த்தரின் வார்த்தை**? பவுல் அப்போஸ்தலர் எழுதியதுபோல, தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இவர்கள் இருப்பார்கள். இப்படிப்பட்டவர்களை நீ விட்டுவிலகு.2 தீமோ 3:5. கிறிஸ்துவின் வார்த்தையை புறக்கணித்து, பைபிளை மொழிபெயர்த்த பரிசுத்தவான்களை கொன்று குவித்தது ரோம கத்தோலிக்க சபை. இன்று இரட்சிக்கப்பட்டோம் என்று சொல்லுகிறார்கள். இவர்கள் **கிறிஸ்துவை** அவமானப்படுத்திவிட்டார்கள். நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய் பிரிவினையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக்குறித்து எச்சரிக்கையாயிருந்து, (அது AOG, IPC சபை பாஸ்டர்களின் சபையானாலும்) **அவர்களை விட்டு விலகவேண்டு மென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.** ரோம 16:17.

AOG அசம்பளீஸ் ஆப் காட் சபை தலைமை **பாஸ்டர்.மோகன்** அவர்கள் நடத்தியது. **கிறிஸ்துவை மறுதலித்த ஜெப மாநாடு** ஆகும்.

**ஜாமக்காரன்:** இந்த You Tube செய்தியுடன் ஜாமக்காரனாகிய நானும் வேத வசன கருத்துக்களை நடுநடுவே வாசகர்கள் புரிந்துக்கொள்ள எழுதியிருக்கிறேன்.

# CSI TAMIL PARISH AL- AIN (UAE)







இங்கு நடந்த கூட்டங்கள் மிகவும் ஆசிர்வாதமாக நடந்தது. இங்கு நடந்த கூட்டம் சபை நாள் சிறப்பு கூட்டமாக இருந்ததால் **துபாய், அபுதாபி, ஷார்ஜா,(UAE)** ஆகிய நாடுகளிலிருந்து ஆயர்களோடு, சபை மக்களும் இக்கூட்டங்களில் கலந்து கொண்டது ஆசீர்வாதமாக அமைந்தது.

**Rev.Christopher Rajendran** அவர்களும், சபை செயலரும் மிக சிறப்பாக கூட்ட ஏற்பாடுகளை செய்திருந்தனர். **அலைன் சிஎஸ்ஐ சபை மக்களுக்காக** ஜெபிக்கிறேன்.

# CSI தமிழ் சபை - ஷார்ஜா (UAE)

அரேபிய நாட்டில் UAE ஐக்கிய நாடுகளில் ஒன்றான **ஷார்ஜா**வில் லெந்து கால கூட்டங்களிலும், குருதோலை ஞாயிறு சிறப்பு கூட்டத்திலும் கர்த்தருடைய வசனங்களை பகிர்ந்துகொள்ள **விசேஷ அழைப்பு** எனக்கு அனுப்பினார்கள். போகவர டிக்கட்டும், VISAவும் அனுப்பினார்கள். விமான நிலையத்தில் பூ செண்டுகளை கொடுத்து சிறப்பு வரவேற்பு அளித்து அடியானை கவுரவித்தனர்.




**Rev.R.Ranjith Sudir** அவர்களும், செயலர் Mr.Arun அவர்களுடன் சபை நிர்வாக குழுவினரும் மிகச்சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தனர். UAE ஐக்கிய நாடுகள் அனைத்துக்கும் என் வரவைப்பற்றி நல்ல விளம்பரம் செய்ததால் அத்தனை நாடுகளிலிருந்தும் ஆயர்களும், சபை மக்களும் கூட்டங்களில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

Rev.விக்டர் பிரேம் குமார் CSI Tamil Parish (Dubai) , Rev.கிறிஸ்டோபர் ராஜேந்திரன் CSI Tamil Parish (Alain), Rev.Roy (South Kerala Malayala Congrication) (Sharjah), Rev.Vargismethew (Central Kerala CSI Dioces) (Sharjah), Rev. John Roland (CNI Church) Sharjah இன்னும் சில ஆயர்கள் யாவரும் கூட்டங்களில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். AG சபை மற்றுமுள்ள பெந்தகோஸ்தே சபை பாஸ்டரும், விசுவாசிகளும் கலந்துக் கொண்டனர்.



கூட்டங்களில் பெரும் ஆவிக்குறிய அசைவு உண்டானது. ஆனால் இந்த சூழ்நிலையில் சபை ஆயர் Rev.R.Ranjit Sudir அவர்கள் **அம்மை** வியாதியால் கூட்டத்தில் கலந்துக்கொள்ள இயலாமல்போனது. அனைவருக்கும் மனதில் வருத்தம் உண்டானது. ஆயர் அவர்கள் சுகம் பெறவும் மறுபடியும் ஊழியம் தொடரவும் ஜெபிப்போம். **ஷார்ஜா தமிழ் சபை மக்கள்** என்னை மிகவும் நேசித்ததும், ஒவ்வொரு குடும்பங்களும் என்மேல் அன்பு செலுத்தியதும் மறக்க இயலாது. கர்த்தர்தாமே இந்த சபையை ஆசிர்வதிப்பாராக! என் புகைப்படத்தை கண்ணாடியில் பதித்து **ஞாபகார்த்த சின்னத்தை** அன்பளிப்பாக கொடுத்தது சிறப்பாக இருந்தது. கர்த்தர் தாமே இந்த சபையை ஆசிர்வதித்து சபை மக்களையும் ஆசிர்வதிப்பாராக!

## இயேசுகிறிஸ்து இலங்கையில் உள்ள அனைத்து மக்களுக்காகவும் இரத்தம் சிந்தினார்:

**இலங்கை வாழ் தமிழர்கள்** அனைவருக்காகவும் கண்ணீர் வடிக்கிறோம். இலங்கை **யாழ்பாண** தமிழர் லட்சக்கணக்கில் குண்டு வெடிப்பினால் செத்துப்போனார்கள். அவர்களின் உடல்கள் குண்டுவெடிப்பில் சதை பிய்ந்து சிதறியது. ஏறக்குறைய அதே **குண்டுவெடிப்பு தெற்கு தமிழர்களையும்** விட்டுவைக்கவில்லை. இம்முறை கிறிஸ்தவ தமிழர்களாக குறி வைக்கப்பட்டு **கிறிஸ்த தேவலாயங்களில்** ஆராதித்துகொண்டிருக்கும்போது குண்டுவெடித்து ஆராாதித்துக்கொண்டிருந்தவர்களின் **உடல் சதைகள்** பிய்ந்து தெறித்து ஆலயத்தில் சிலை வடிவில் வைத்திருந்த **இயேசுவின் உடல் முழுவதும் இரத்தத்தோடு** ஒட்டியிருந்ததாக செய்தி கூறுகிறது. ஏறக்குறைய இலங்கையின் நான்கு திசைகளில் உள்ள தமிழர்கள் குண்டுவெடிப்பில் இறந்தார்கள். உலகமே தங்கள் கண்டனங்களை அறிவித்தது.

தீவிரவாதிகளின் அடுத்த இலக்கு இலங்கையில் உள்ள **புத்தகோவில்கள்**. அதற்காக **புத்த பெண்** ஊழியர்களின் **வெள்ளை உடுப்புகள்** கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. **இஸ்லாமிய ISI தீவிரவாதிகளின்** பின்னால் இயக்குபவர்கள் யார்? மேற்கொண்டு குண்டுவெடிப்பு மனிதர்களை தாக்காமல் இருக்க ஜெபிக்கிறோம். ஜெபிப்போம்.

**கர்த்தர் நகரத்தை காவாராகில் காவல் காக்கிறவர்கள் விழித்திருக்கிறது வீண்.** சங் 127:2. உலகமனைத்திலும் உள்ள ஜாமக்காரன் வாசகர் சார்பில் இலங்கையில் மரித்தவர்களின் குடும்பத்தினருக்காக ஆழ்ந்த அனுதாபங்கள் கூறுகிறோம்.

**MAY - 2019**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.